# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2123/50 - 2019 මැයි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.16

*2123/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்**

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2019 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் இடாப்புக்களின் திருத்தம் 2019, மே மாதம் 15 ஆந் திகதி ஆரம்பமாகி விட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பதியும் அலுவலர்களால் அவர்களின் அலுவலகங்களிலும் கீழ்க்காணும் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும் :-

| இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் |
|---|---|
| ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | தேர்தல் மாவட்டத்திற்கான முழு தேருநர் இடாப்பின் பிரதி |
| ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலாளர் பிரிவினுள் சாதாரண வதிவு உறுதியாகும் தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள் | ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களினுள் சாதாரண வதிவு உறுதியாகும் சகல தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவிற்குள் சாதாரண வதிவு உறுதியாகும் எல்லாத் தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |


1A - G 30076 — 57 (2019/05)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3.* ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தின் ஒரு வாக்காளராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் செல்லுபடியான தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலித்துப் பார்த்தல் வேண்டும்.

*4.* 2019 ஆம் ஆண்டிற்காக தேருநர்களாக பதியப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் ஆட்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலர்களினால் பிரதான குடியிருப்பாளர்களுக்கு உரிய படிவங்கள் 2019.05.15 ஆந் திகதி முதல் விநியோகஞ் செய்யப்படும். பிரதான குடியிருப்பாளர்களினால் பூர்த்தி செய்யப்படும் படிவங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் 2019, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இடம்பெறும். தனது இல்லத்தில் தேருநர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் சகலரினதும் உரிய விபரங்களை பிழையின்றி விரைவாக வழங்குவதன் மூலம் பிரதான குடியிருப்பாளர்கள் கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேகர,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2019, மே 16.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.